# அம்மன் விழா

இறைவன் சந்நிதியிலே ஏழையும், சீமானும் சமம்; இறைவன் வழிபாடு, எளியவனுக்கும் உரியது; செல்வனுக்கும் உரியது. தெய்வவழிபாட்டினை ஒட்டிய திருவிழாக்களும், பண்டிகைகளும் நம் பாரத நாட்டிலே எண்ணற்றவை. அவற்றைக் கொண்டாடுவதிலும் மக்களுக்குக் குன்றாத ஆர்வம். கூட்டங்கூடி வாழ்தல் உயிரினங்களின் இயற்கை. சமுதாய வாழ்வு பேணுதல் மக்களின் இயல்பு. இந்த இயலார்வம், தெய்வ பக்தியுடன் இணைந்து, திருவிழாக்கள், பண்டிகைகள் ஆகிய கோலாஹலங்களின் மூலம் வெளியாகிறது.

"நாம் போகலாமா, சொல்லுங்களேன்!" என்று கேட்டேன் கணவரை. ஆனால் அவர் பதிலே அளிக்கவில்லை. அவர் முகத்திலே கடுமையும் காணோம். ஒரு தினுசான யோசனையும் நிதானமும் நிலவியிருந்தன.

"ஒரிஸ்ஸாவில் பூரி ஜகன்னாதம் தான் கோயில் சிறப்பிற்கும், தேர்விழாவுக்கும் பிரசித்தி பெற்றது. ஆனால் அதற்குப் போகவேண்டும் என்று உனக்கு ஆசை இருக்கவில்லையே! பலதடவை பார்த்த இந்த 'அம்மவாரு' திருவிழாவில் என்ன விசேஷமாக இருந்துவிடப்போகிறது உனக்கு?" என்று வினவினார் சிறிது பொறுத்து.

"அதுதான் விசேஷம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்! பிறந்து வளர்ந்தது பிறகு பிரியும் வரையில் பலதடவை கண்டுகளித்த திருவிழா என்பதானால்தான் எனக்கு ஆசையாக இருக்கிறது! பிறந்த ஊரில் நடக்கும் திருவிழாவைக் காணும் ஆர்வமும், பிறந்தகம் போய்வரும் ஆசையும் இரண்டறக் கலந்துள்ளன என் இதயத்திலே!" என்று விளக்கமாக நாவினால் புகல எனக்குத் தோன்றவில்லை!

"சொன்னால் இதெல்லாம் புரியாது உங்களுக்கு!" என்று சொல்லி மழுப்பிவிட்டேன்!

எங்கள் ஊர் 'அம்மவாரு' மிகவும் சக்தி வாய்ந்தவள். அம்மனை பற்றி வழங்குகிற கதைகள் பல. அவற்றை நான் முதன் முதலில் கேட்டபொழுது, ஆஹா!, எத்தகைய கிளர்ச்சி ஏற்பட்டது!

அம்மன் பிறந்தகம் வருகிறாள்! அதுதான் திருவிழா! இதைக் கணவரிடம் சொல்லட்டுமா? சொன்னால் என்ன நினைப்பார்? நம்புவாரா?

கோயிலில் குடியிருக்கும் இறைவி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பிறந்தகம் வருகிறாள். அவளுடைய பிறந்தகம் அவள் வருகையைக் கொண்டாடி மகிழும் கோலாஹலம்தான் திருவிழா.

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு 'மொஹிரி ராஜு' வீட்டாரிடமிருந்து, 'தேசி பெஹாரா' வீட்டார் இந்த பூஜையை ஏற்றுக்கொண்டார்கள். அதற்குப் பின் தலைமுறை தலைமுறையாக இந்த தேசி பெஹாரா வம்சத்தினர்தாம், தேவியை வாசலில் பந்தலில் ஆவாஹனம் செய்து திருவிழாவைத் துவக்குகிறார்கள். இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை - அதாவது, ஒரு வருடம் விட்டு மறுவருடம் - சந்தா வசூலித்து, பொறுப்பு ஏற்று, கோயிலிலிருந்து அம்மனை அழைத்து, அமர்த்தி விழாவை ஆரம்பித்து நடத்துகிறார்கள்.

தேசி பெஹாரா வீட்டாருக்கு அம்மவாரு கண்கண்ட தெய்வம் என்றும் சொல்லலாம்; கண்கண்ட சிறுமி என்றும் சொல்லலாம். எப்பொழுதும் அந்த வீட்டில் ஐந்து அல்லது ஆறு வயது சிறுமி போன்று அம்மன் உலவி வருவதாக அவர்கள் நம்புகிறார்கள். வீட்டுக் குழந்தைகளிடையே அம்மனும், கறுப்பு உடை உடுத்து வளைய வருவதாக அவர்களுக்குத் தோன்றுமாம்.

"குழந்தை அழுகிறது; தொட்டிலை ஆட்டிவிட்டு வருகிறேன்." என்று ஓடி வரும்போது, தொட்டில் ஆடிக்கொண்டிருக்குமாம். குழந்தை அழாமல் படுத்திருக்குமாம். "சரி அம்மன்

ஆட்டிவிட்டிருக்கிறாள்; சரி குழந்தை தூங்கட்டும் என்று நினைத்துக்கொள்வார்களாம் சகஜமாக!

வீட்டில் ஏழு பேர் சாப்பிட வேண்டும். இலைகளைப் போடும்பொழுது ஏழு இலைகள் மட்டும் போட்டு நிறுத்தத் தோன்றாதாம். அம்மனுக்கு ஒரு இலை சேர்த்து எட்டு இலை போடவேண்டும் என்று தோன்றுமாம்.

இதைக் கணவரிடம் சொன்னால்? "உம், எட்டாவது இலையில் பண்டங்களை அம்மன் சாப்பிடுவாளாமோ?" என்று இடக்காகக் கேட்பார்!

அம்மனுக்கும் இலை போட வேண்டும், பரிமாற வேண்டும், அம்மன் சாப்பிட வேண்டும் என்று தோன்றுமளவிற்கு இறைவி அவ்வீட்டாரின் உள்ளங்களில் பதிந்து விட்டாள் என்றால் அது எளிதில் ஏற்படக்கூடுமா? என் அம்மா எது தின்றாலும், என் அப்பா எது வாங்கினாலும், என்னை நினைத்துக்கொள்ளமாட்டார்களா? நான் அங்கே இருந்து அவர்களுடன் பங்கிட்டுக்கொண்டு சாப்பிட முடியாததால், நான் அவர்களுடைய மகளல்லாது போவேனா?

தேசி பெஹாரா வீட்டாருக்கு அம்மன் குழந்தைதான், மகள்தான் என்பதிலே சந்தேகமா? இதோ இன்னொரு விஷயம்: அம்மன் உலவும் வீடுதான் அது. ஆனால் அந்த வீட்டார்களும் மனிதர்கள் தாமே! ஓரகத்திகளிலே எவளாவது சற்று அசதி மறதியாகவோ அலட்சியமாகவோ இருந்து நிவேதனம் படைக்காவிட்டால், உடனே சிறு பெண்போல வந்து அம்மன் "மறந்துவிட்டாயே!" என்று கேட்குமாம். தாயார் குழந்தையை எத்தனையோ அன்புடன் பேணினாலும், சிலசமயம் அசிரத்தையாக இருப்பது சகஜம்தான். அம்மன் தெய்வம்போல் அச்சுறுத்துபவளாக இராமல், ஆதரவு நாடி நிற்கும் ஆசை மகளாகவே அவர்களுக்குத் தென்படுகிறாள் என்பதிலே ஐயமென்ன? எங்கள் ஊர் அம்மனின் திருநாமம் 'சாந்தாலம்மா' ஆயிற்றே? மரியாதையுடன் மதனியைக் கேட்கும் நல்ல நாத்தியைப் போலவும், தாயாரைச் சலுகையுடன் கேட்கும் பெண்ணைப் போலவும் அம்மன் விளங்குகிறாள், பெயருக்கு ஏற்றபடியே! குழந்தைகள் விரும்புவது தீனிதான்; அம்மன் நிவேதனம்தானே நினைப்பூட்டுகிறாள்?

அம்மனுக்கு தினமும் காலையில் தேங்காய், பழம் நிவேதனம். இரவு கடையில் வாங்கிய தித்திப்புப் பண்டம் நிவேதனமாம். எப்பொழுதுமே இதுதான் வழக்கம்.

திருவிழா தொடங்கிய பிறகு தேசி பெஹாரா வீட்டில் எண்ணெய்ப் புகை, நெய்ப்புகை கூடாதாம். எல்லாம் வேகவைத்த பண்டங்களே சமைப்பார்களாம்.

ஒருதடவை வீட்டுப் பெண்கள் எல்லோரும் வளையல் செட்டியிடம் வளையடுக்கிக் கொண்டார்களாம். ஐந்து பேருக்கு என்று கணக்கு போட்டுப் பணம் கொடுத்தார்களாம். "ஆறு பேருக்குப் போட்டேனே! இன்னும் எட்டணா சேர வேண்டும் எனக்கு!" என்று சொன்னானாம் வளையற்செட்டி. "ஆறாவது நபர் அம்மன்" என்று தீர்மானித்து பணத்தைச் செலுத்திவிட்டார்களாம் உடனே.

ஒரு நாள் காலை வண்டிக்காரன் ஒருவன் வாடகை கேட்டான். "நேற்று இரவு ஏற்றிக்கொண்டு வந்தேனே! 'காலையில் வந்து கேள், தருவார்கள்' என்று சொன்னாளே அந்தப் பெண்பிள்ளை!" என்று சொன்னானாம்; மறு பேச்சில்லாமல் வாடகையைக் கொடுத்துவிட்டார்களாம் தேசி பெஹாரா வீட்டார்!

இதுபோல சம்பவங்கள் அவ்வப்பொழுது நிகழ்வதுண்டாம்!

திருவிழா நடப்பது தேசி பெஹாரா குடும்பத்தார்களின் தலைமையிலேதான். மஹா சிவராத்திரியான மறுநாள் கொடி கம்பம் நடுவார்கள். அதன் பிறகு திருவிழாவுக்கு காப்பு கட்டுவார்கள். ஆனால் கோலாஹலம் துவங்க அம்மனின் அனுமதியை எதிர்பார்த்து இருப்பார்கள். அம்மவாரு கோயிலிலிருந்து கிளம்பி வர வேண்டும் - அதற்குத்தான் அனுமதி தேவை. கோயிலில் ஐந்தாறு பூசாரிமார்கள், இரவு பத்து மணிக்கு மேல் மந்திரங்கள் ஜபிப்பார்கள். இரண்டு கெஜத்திற்கு அப்பால் ஒரு தாம்பாளம் இருக்கும். அம்மனின் சிரசின் மேல் இருக்கும் மந்திர புஷ்பம் விர்ரென்று எழும்பி, அந்தத்

தாம்பாளத்திலே விழவேண்டும். அதுதான் அனுமதிக்கு அறிகுறி. புஷ்பம் எழும்பி வந்து விழும் காட்சி அற்புதம் என்று சொல்லுவார்கள். ஆனால் அதைப் பார்க்க எல்லோரும் கொடுத்து வைத்தவர்களாக முடியுமா? புஷ்பம் என்றைக்கு விழும், எப்பொழுதுவிழும் என்று யார் அறிவர்? திருவிழாவைத் துவக்குவதிலும் அம்மனின் சேவையிலும் திளைத்தவர்கள் நிறைந்த சிறிய ஜனத் திரள்தான் இரவெல்லாம் கண்விழித்து காத்திருக்கும்; அந்த அற்புதத்தைக் காண முடியும்.

அனுமதி கிடைத்தபின் கோயிலிலிருந்து அம்மன் புறப்பட்டு பிறந்தகமாகிய தேசி பெஹாரா வீட்டிற்கு வந்து சேர்கிறாள். ஏழு கலசங்கள் ஆவாஹனம் செய்யப்படுகின்றன பந்தலிலே. திருவிழா துவங்கிவிட்டதை ஊர் முழுவதும் பறை சாற்றுவார்கள்.

செட்டிமார்கள் நிறைந்த ஊர்ப் பகுதியிலே இருக்கிறது தேசி பெஹாரா இல்லம். செட்டிமார்கள் எல்லோரும் ஒன்றுபட்டும், போட்டி போட்டுக்கொண்டும் திருவிழாவின் சிறப்புக்குச் செலவு செய்வார்கள்.

"ரதங்கள்" ஒரு விசேஷ அம்சம்; ஒவ்வொரு திருவிழாவின் போதும் புது ரதங்களை தயாரிப்பார்கள். தெருவிற்கு ஒரு தேர் வீதம் அந்தப் பகுதியினர் சந்தா போட்டுத் தயார் செய்வது வழக்கம். வரவேண்டிய ரதங்களிலே ஒன்று குறைந்தாலும் அம்மன் ஒப்பமாட்டாளாம். தேர்கள், தச்சு வேலைக்கும் சிற்பச் சிறப்புக்கும் உயர்ந்த அத்தாட்சிகள் என்று சொல்ல முடியாது.

ஆனால் தேர்களுக்கு அலங்காரமாக விளங்கும் பெரிய பெரிய உருவங்களுக்காகவும் தீபாலங்காரங்களுக்காகவும் செலவாகும் பொருளும், சேவையும் கொஞ்சம் அல்ல! ராமர், பரசுராமர், ராவணன், அனுமன், காளி, சண்டி ஆகிய உருவங்கள் ரதத்திற்கு ஒரு உருவம் _விதம் காட்சியளிக்கும். சில 'சக்தி' உருவங்கள் பெயருக்கு ஏற்றவாறு பயங்கரம் கொண்டிருக்கும். அவற்றைத் தயாரித்து முடிக்குமுன் எத்தனையோ பேர் கண்களையும் உயிரையும் இழப்பது உண்டாம் - தயாரிக்கும் சிற்பிகள் ஒருவருக்கு மேல் பலர் தாம்! உன்னி உன்னிப் பார்த்து பிம்பத்தை செய்து முடிப்பது ஒரே ஒரு சிற்பியின் வேலையாக இருப்பது ஆபூர்வம். அம்மனின் சேவையையும், ஆத்ம திருப்தியையும் முன்னிட்டு சிற்பிகளும் கைங்கரியம் செய்ய முன் வருகிறார்கள்!

'வேஷங்கள்' மற்றொரு விசேஷ அம்சம். புலிவேஷம் எல்லாவற்றிலும் சிறந்த வேஷம். வேண்டுதலையுள்ளவர்கள் வேஷங்கள் புனைந்து, திருவிழாவில் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வளைய வருவார்கள். வீடுகளுக்குச் சென்று வேஷத்தைக் காட்டிப் பணம் பெறுவார்கள். அந்த வேஷத்துடனேயே அம்மனைத் தரிசனம் செய்துவிட்டு வந்தபின் வேஷத்தைக் களைவார்கள். அவரவர் சக்திக்குத் தகுந்த வேண்டுதலைகள், வேஷங்கள் ஏற்பார்கள். புலிவேஷம் போடுவது பணம் செலவு செய்யத் தயங்காதவர்களுக்கு; வேண்டுதலைப் பொருத்தது. ஆண்டி முதல் அரசன் வேஷம், ராம லக்ஷ்மணர் வேடம்வரை பல தினுசு வேஷங்கள் சாரி சாரியாக காட்சியளிக்கும் ரதங்கள் நிறைந்த பகுதியிலே. திருவிழா பார்க்க விரும்பும் ஜனக்கூட்டமும் அங்கேதான் தேங்கியிருக்கும்.

புலிவேஷங்கள் உடல் உபாதையும் கொடுக்குமாம். புலி வரிகளைப் போட்டுக்கொள்ள ஏதோதோ திராவகம், மெழுகு, மருந்து இத்யாதி தேவை. அவற்றைப் புனைந்து கொண்டால் உடம்பில் எரிச்சலுண்டாகுமாம். ஆனால் சிறுவர்கள் கூட இந்த வேடம் தரித்து, பாய்ந்து பாய்ந்து ஆடிக்காட்டுவது உண்டு. புலிக்கு அண்மையிலே ஒருவன் விசிறி பிடித்து விசிறிக் கொண்டு வருவான். புலிகள் களைத்துப் போவதும் உண்டு. தெரிந்தவர் வீடுகளுக்குத்தான் பணங் கேட்கச் செல்லுவார்கள்; முழு ரூபாய்களைப் பெறுவார்கள்!

குடையைப் பிடித்துக்கொண்டு குதித்து ஆடும் குடை வேஷமும், சில தலையலங்காரங்கள் கொண்ட உயர்ந்த வேடம்தான். கருப்பு மூக்குக் கண்ணாடி அணிந்து தலையலங்காரத்துடன் வருபவர்களை முதலில் கண்டுபிடிப்பது சிரமம். சில்லரையைக் கொடுக்கும்போதுதான் "நான்தான் சாமி!" என்று சொல்வான் வீட்டுப் பால்காரன்!

வேடம் பூண்ட, சீப்பு கண்ணாடி விற்கும் 'லம்பாடிச்சி', அபூர்வ மருந்துகள் விற்கும் 'நாடோடி', இவர்கள் எல்லோரும் திருவிழா பார்க்க வரும் பட்டிக்காட்டு மக்களிடம் நிஜமாகவே தங்கள் கைத்திறமையைக் காட்டுவார்கள் உரிமையுடன். அக்கம் பக்கத்திலிருக்கும் பார்வையாளர்கள் ரசிக்க வேண்டும், குதூகலிக்க வேண்டுமென்றே அட்டகாசம் செய்வர். குல்லா, தலைப்பாகை அணிந்த தலைகளிலிருந்து அந்த அம்சங்களை அப்புறப்படுத்தும் முகமூடி வேஷம்கூட நகைச்சுவையூட்ட ஏற்பட்டது தான்.

குதூகலத்திற்கும் சிரிப்பிற்கும் ஊடே அருவருப்பு கூட்டும் வேஷ அம்சங்கள் ஓரிரண்டு இருக்கும். கொலைக்களத்திற்குச் செல்லும் குற்றவாளியைப் பார்த்துப் புலம்பும் மனைவி - இத்யாதி. இவை மிகக் குறைவுதான்.

செட்டிமார்களின் பெரிய பெரிய வீடுகளின் மாடிகளும், வாசல்களும் பொது ஜனங்களுக்காக வழங்கப்படும். அவரவர்க்குப் பரிச்சயமான வீடுகளிலே போய் சௌகரியமாக அமர்ந்து, தெருவழியே செல்லும் வேஷங்களைக் கண்டு ரசிக்கலாம். இதற்கு வசதியுண்டு. மாலை வேளைகளில் சென்றால், இரவு சுமார் ஏழு மணிக்கு அவ்வழி வலம் வரும் அம்மனின் சேவை கிட்டும். போலீஸ் காவலுடன், சில முக்கியஸ்தர்கள் புடை சூழ, அம்மன் வருவதுதான் வழக்கம். சாந்தலம்மாவின் தரிசனத்திற்குப் பின் வீடு திரும்பலாம். வேஷங்களையும், அவை சுற்றிவரும் பொழுது பார்த்துவிடலாம். ஆனால் ரதங்களைப் பார்க்க நாம்தான் சுற்றிப் போய்ப் பார்க்கவேண்டும். தேர்கள் நகர்ந்து வாரா! அவற்றை வடம் பிடித்து இழுத்து வருவது வழக்கம் இல்லை!

தினமும் இரவு ஏழு அல்லது எட்டு மணி சுமாருக்கு அம்மன் அந்தி வீதிகளிலே வருவாள். அவள் பவனி வருவதும் தேரிலே அல்ல! தேசி பெஹாரா வீட்டாரிலே எஜமானி எவளோ, அவள் தலையிலே பெரிய கலசம் இருக்கும். மற்ற நாட்டுப் பெண்கள், உறவினர்கள், மற்ற ஆறு கலசங்களை ஆளுக்கு ஒன்றாகத் தாங்கி வருவார்கள், தலைமீது.

சில வீதிகளுக்குப் போக அம்மன் மறுத்துவிடுமாம். சில இடங்களிலே அம்மன் நின்று விடும். அது கோபத்தினால் என்பதும், அல்லது மகிழ்ச்சியினால் என்பதும் தெரியுமாம். வேண்டுதல்கள் நிறைவேறாத இடங்களிலே, அல்லது வேண்டுதல்களைச் சரியாகச் செலுத்தாதவர்கள் வந்து வணங்கும் சமயங்களிலே, அம்மன் நகரமாட்டாள். சில ரதங்களுக்கு அருகே வந்ததும் அம்மன் மகிழ்ச்சி கொள்ளும்பொழுது, பெரிய கலசம், தாங்கியிருப்பவளின் தலையின் மீதிருந்தவாறே விர்ரெனச் சுழலுமாம். நாலு ராட்டினங்களுடன் சுழலும் ரதத்திற்கருகே வரும்பொழுது அம்மன் மகிழ்வதுண்டாம். குழந்தையுள்ளம் படைத்தவளாகிறாள் போலும் தேவி - பிறந்தகம் வந்ததும்!

திருவிழாவின் முடிவை, அம்மனின் அனுமதியுடன்தான் நிச்சயிப்பார்கள். ஆனால் அப்பொழுதும் அம்மனுக்கு விழா முடிவதிலே அரைகுறை விருப்பம்தான் போலும். கடைசி நாள் அம்மன் கோபமுடன் ஒரே ஒரு வீதியைத்தான் வலம் வருமாம். "போய்விடுகிறேன், சீக்கிரமே சென்று விடுகிறேன்!" என்று குமுறும் பிறந்தகச் செல்வியின் மணப்போக்கினைப் பிரதிபலிக்கிறது இந்தச் செயல்! ஆனால் கடமையை உத்தேசித்து, மகளின் குமுறலைச் செவிசாய்க்காத பெற்றோர்போல் தேசி பெஹாரா குடும்பம் திருவிழா முடிவை அறிவித்து விடுகிறது!

ஏழு கலசங்கள்தான் அம்மனின் பிரதிநிதிகள். ஆனால் கடைசி நாளன்று வீட்டிற்கு ஒரு கலசமாக சுமார் ஆயிரம் கலசங்கள் வரை எடுத்துச் செல்வார்களாம் - பச்சை மரத்தின் நிழலில் வைத்து வருவார்களாம். எப்படியிருக்கும் அந்தக் காட்சி?

இதையெல்லாம் பார்த்ததில்லை நான். ரதங்கள், வேஷங்கள், தேசி பெஹாரா இல்லம், பந்தல், கூட்டம் குதூகலம் இவைதான் நான் கண்டவை.

ஆனால், திருவிழாவின் மூலமும், நடக்கும் விதமும், அதற்குள்ள சிறப்பான தத்துவமும், முறையும், மனதில் பதிந்துவிட்டபடியால் அந்தத் திருவிழாவின் உயர்வு பலமடங்காக மனதில்படுகிறது. கண்கள் கண்டவற்றையும், செவிகள் கேட்டவற்றையும் மனம் தழுவி ஏற்று மகிழ்கிறது.

"நிஜமாகவா? அம்மனுக்கும் பிறந்தகப் பற்றா? உங்கள் ஊரில் வழங்குகிறதா இப்படி?" என்று கேட்டார் கணவர்! தாக்ஷாயணியை அவர் மறந்தே போனார் போலும்!

"ஆமாம் நிஜம். ஒரிஸ்ஸா மாகாணத்தின் தென் கோடியிலிருக்கும் எங்கள் ஊராகிய பாகம்புரத்தில் அம்மவாரு திருவிழா பற்றித்தான் நான் சொல்கிறேன்" என்று கம்பீரமாக பதிலளித்தேன்.

எனக்குத் துணையாக என் கணவரும் புறப்பட்டுவிட்டார்! பிறந்தகத்திலே, கணவனுடன் சிலநாள் தங்குவதை எந்தப் பெண்தான் விரும்பாள்? அம்மனின் பிறந்தகக் கோலாகலத்துடன், என் பிறந்தகக் கோலாஹலத்தையும் அவர் ரசிக்கட்டுமே!

**********

(சுதேசமித்திரன் நடத்திய 'தேர் திருவிழாக்கள்' கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றது)